புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 254 | 20-03-2026 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volume 01 | Issue: 254 | 20-03-2026 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## "விஜய் மீதான நம்பிக்கை போய்விட்டது, ஏனெனில்..." திமுகவில் இணைந்த ரஞ்சனா நாச்சியார் விளக்கம்



சென்னை: மார்ச்.20–

"விஜய் ஒரு பெரிய அரசியல் தலைவராக வருவார் என்ற நம்பிக்கை எனக்கு போய்விட்டது. அதனால் அந்தக் கட்சியிலிருந்து வெளியே வந்துவிட்டேன்" என தவெகவில் இருந்து விலகி திமுகவில் இணைந்த ரஞ்சனா நாச்சியார் தெரிவித்தார்.

தமிழக வெற்றிக் கழகத்தில் மகளிரணி நிர்வாகியாக இருந்த நடிகை ரஞ்சனா நாச்சியார், அக்கட்சியில் இருந்து விலகி முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இதற்கு முன்பு பாஜகவில் இருந்த ரஞ்சனா, சில மாதங்களுக்கு முன்பாக தவெகவில் இணைந்தார்.

இந்தச் சூழலில், விஜய் சங்கீதா விவாகரத்து விவகாரம் தொடர்பாக விஜய் மீது ரஞ்சனா நாச்சியார் பல்வேறு விமர்சனங்களை பொதுவெளியில் முன்வைத்தார். இதனையடுத்து, அவர் தவெகவில் இருந்து விலகி இன்று திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

திமுகவில் இணைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரஞ்சனா நாச்சியார், "எனது எண்ணங்களும், எனது கொள்கைகளும் இணைந்து பயணிக்க கூடிய இயக்கம் திமுக. அந்த வகையில் திமுகவில் இணைந்துள்ளேன். எங்கள் பாரம்பரியத்தை சேர்ந்த வேலு நாச்சியாரை கொள்கை தலைவராக விஜய் அறிவித்ததால் திமுகவில் இணைந்தேன்.

ஆனால், தவெகவில் தொடர்ந்து பெண்கள் புறக்கணிப்பும், அவமரியாதையும் நடந்துகொண்டுள்ளது. பெண்கள் பாதுகாப்பை திமுகவைத் தவிர வேறு எந்தக் கட்சியாலும் கொடுக்க முடியாது. தேர்தலுக்கு 30 நாட்களே உள்ள நிலையில், இன்னமும் விஜய்யால் மக்களை சந்திக்க வெளியே வரவில்லை. அவரால் இனியும் வெளியே வரமுடியாது என்பது தெரிகிறது. ஏதாவது பிரச்சினை என்றால் விஜய்யும் வரமாட்டார், நிர்வாகிகளும் ஓடி ஒளிந்துக் கொள்வார்கள்.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் கூட தவெகவினர் மக்களிடம் செல்லவில்லை. மேடைப் பேச்சுக்கு 4 பேர் இருந்தால் கட்சியை நடத்தி விடலாம் என தவெக நினைக்கிறது. பொறுக்கித் தனம் செய்வது அல்ல அரசியல், பொறுப்போடு நடந்துகொள்வதே அரசியல். விஜய் ஒரு பெரிய அரசியல் தலைவராக வருவார் என்ற நம்பிக்கை எனக்கு போய்விட்டது. அதனால் அந்தக் கட்சியிலிருந்து வெளியே வந்துவிட்டேன்.

மதவாத கட்சியோடு சேர்ந்து பயணிக்க மாட்டோம் என விஜய் சொல்கிறார். ஆனால், ஆதவ் அர்ஜுனா கூட்டணி பேச்சுவார்த்தை நடந்ததாக சொல்கிறார். இதில் எதனை நம்புவது? ஆதவ், ஜான் ஆரோக்கியசாமி, புஸ்ஸி ஆனந்தை வைத்து கட்சியை நடத்தலாம் என விஜய் நினைப்பது முட்டாள்தனம். தவெக ஒரு மர்மமான முறையில்தான் நடக்கிறது. பொய் நம்பிக்கைகளை விதைத்து மக்களை தவறாக வழிநடத்துகிறது தவெக" என்றார் ரஞ்சனா நாச்சியார்.

## தபால் வாக்கு; புதிதாக 5 துறைகள் சேர்ப்பு
## தேர்தல் ஆணையம் அறிவிப்பு...

சென்னை, மார்ச். 20–

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்ட சபைக்கான தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் ஆணையம் கடந்த 15 ந்தேதி அறிவித்தது. இதன்படி, ஏப்ரல் 23 ந்தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4 ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது....

தேர்தல் சமயத்தில் அத்தியாவசியப் பணிகளில் இருப்பவர்களுக்கு தபால் வாக்கு செலுத்தும் உரிமை வழங்கப்படுகிறது. இந்த நிலையில், தபால் வாக்கு செலுத்த மேலும் 5 அரசு துறைகளை சேர்ந்த ஊழியர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது .

இதன்படி அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், மின்சார வாரியம், போக்குவரத்து காவலர்கள், சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறையினர் ஆகியோர் தபால் வாக்கு செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;...

நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல்களில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் (PwD), சேவை வாக்காளர்கள் மற்றும் தேர்தல் பணியில் உள்ள வாக்காளர்கள் தபால் வாக்கு மூலம் வாக்களிக்க இந்திய தேர்தல் ஆணையம் (ECI) வசதி செய்கிறது.

1. அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவை களுக்கான பொதுத்தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் இடைத்தேர் தல்களுக்கான அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மார்ச் 15, 2026 அன்று அறிவித்தது. அட்டவணையின்படி மார்ச் 16, 2026 அன்று அசாம், கேரளா மற்றும் புதுச்சேரிக்கு அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன..

2. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951ன் பிரிவு 60(நீ)ன் படி, 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் மாற்றுத்திறனாளிகள் (PwDs) என அடையாளப்ப டுத்தப்பட்டவர்கள் தபால் வாக்கு மூலம் தங்கள் வாக்கைச் செலுத்தலாம் என்று ஆணையம் அறிவித்துள்ளது..

3. இத்தகைய வாக்காளர்கள் படிவம் 12D (Form 12 D)-ஐப் பயன்படுத்தி, தேர்தல் அறிவிக்கை வெளியான 5 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட பிஎல்ஓ (வாக்குச்சாவடி நிலை அலுவலர்) மூலம் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் (RO) சமர்ப்பிக்க வேண்டும். வாக்குச் சேகரிக்கும் குழுக்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளைச் சேகரிப்பார்கள். இதற்கான கால அட்டவணை தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு வேட்பாளர்களுக்கும் பகிரப்படும்.

4. தேர்தல் தேதியன்று அத்தியாவசியப் பணிகளில் (Essential services) இருக்கும் வாக்காளர்கள், தங்கள் துறையின் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) மூலம் தபால் வாக்கு வசதிக்கு விண்ணப்பிக்கலாம். தீயணைப்புத் துறை, சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, ஆம்புலன்ஸ் சேவைகள், விமான போக்குவரத்து, அரசு சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் போன்றவை இந்த வசதியின் கீழ் வருகின்றன..

5. தேர்தல் நாள் செய்திக் சேகரிப்பிற்காக தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் அத்தியாவசியப் பணிகளில் உள்ள 'வராத வாக்காளர்கள்' (Absentee voters) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர், அவர்களும் தபால் வாக்கு வசதிக்குத் தகுதியுடையவர்கள்.

6. தேர்தல் பணியில் இருக்கும் ஒரு வாக்காளர் தனது தபால் வாக்கைப் பெற்று, அதில் தனது வாக்கை பதிவு செய்து, வசதி மையத்தில் (Facilitation center) சமர்ப்பிக்க வேண்டும். வசதி மையத்தில் வாக்காளர் முழுமையான ரகசியத்துடன் வாக்களிப்பதை உறுதி செய்ய இந்திய தேர்தல் ஆணையம் ECI) அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

7. சேவை வாக்காளர்களுக்கு (Service voters) தபால் வாக்குகள் மின்னணு முறையில் அனுப்பப்படும் (ETPBS - Electroni cally Transmitted Postal Ballot System) வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டவுடன் இவை அனுப்பப்படும். இதற்கான தபால் செலவை சேவை வாக்காளர்கள் ஏற்க வேண்டியதில்லை.

8. பதிவு செய்யப்பட்ட தபால் வாக்குகள் அனைத்தும் வாக்கு எண்ணும் நாளான மே 4, 2026 அன்று காலை 8:00 மணிக்குள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களை (ROs) சென்றடைய வேண்டும்..

9. தேர்தல் நடத்தும் அலுவலர் (RO)/மாவட்ட தேர்தல் அலுவலர் (DEO) மேற்கண்ட விதிகள் குறித்து அரசியல் கட்சிகள்/போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விளக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது....

## ஒரே நாளில் இருமுறை வீழ்ச்சி: தங்கம் விலை ரூ.5,360 குறைவு!

சென்னையில் (மார்ச் 19) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரே நாளில் 2 முறை குறைந்து, கிராம் ரூ.14,000க்கு கீழாக சரிந்துள்ளது. நேற்று ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,360 குறைந்து ஒரு பவுன் ரூ.1,11,200 க்கு விற்பனையாகிறது. தொடர் உச்சங்களில் மிரட்டிய தங்கம் விலையின் படிப்படியான சரிவு வாடிக்கையாளர்களுக்கு ஜாக்பாட் மகிழ்ச்சியை தந்துள்ளது.

இந்த வாரத்தின் முதல் வர்த்தக நாளான திங்கள்கிழமையன்று தங்கம் விலை கிராமுக்கு ரூ.400 குறைந்து பவுன் ரூ.1,17,680 க்கு விற்பனை செய்யப்பட்டது. (மார்ச் 18) 22 காரட் தங்கம் விலை ஒரு கிராம் ரூ.14,570க்கும், ஒரு பவுன் ரூ.1,16,560க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தொடர்ந்து நேற்றும் தங்கம் விலை அதிரடியாக இரண்டு முறை குறைந்துள்ளது.

அதன்படி, சென்னையில் (வியாழக்கிழமை) காலை கிராமுக்கு ரூ.270 குறைந்து ஒரு கிராம் ரூ.14,300க்கு விற்பனை செய்யப்பட்டது. பின்னர், மாலை வேளையில் கிராமுக்கு மேலும் ரூ.400 குறைந்து ஒரு கிராம் ரூ.13,900 க்கு விற்பனையாகிறது. இன்று ஒரே நாளில் மட்டும் கிராமுக்கு ரூ.670 குறைந்துள்ளது. அதேபோல் ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,360 குறைந்து ஒரு பவுன் ரூ.1,11,200 க்கு விற்பனையாகிறது.

இந்த விலை சரிவு நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தமிழகம் போன்ற மாநிலங்களில் இனி திருமண சீசன் என்பதால் இப்போதே நகையை வாங்கி வைத்துக் கொள்ள ஆர்வம் காட்டப்படுகிறது.

தங்கம் விலை சரிவதைப் போல் வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளியின் விலை இன்று ஒரு கிலோவுக்கு ரூ. 10,000 குறைந்துள்ளது. ஒரு கிராம் ரூ. 265க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ. 2,65,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## 5 தலைநகரங்கள் முதல் 'அன்பான சர்வாதிகார ஆட்சி' வரை: நாதக வாக்குறுதிகளின் முக்கிய அம்சங்கள்

சென்னை: மார்ச்.20–

அன்பான சர்வாதிகார ஆட்சி முறையாக நாம் தமிழர் கட்சியின் ஆட்சி முறை இருக்கும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. 2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அக்கட்சியின் செயற்பாட்டு வரைவு அறிக்கையை சீமான் வெளியிட்டுள்ளார். அதில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின் முக்கிய அம்சங்கள்:

தலைநகரை மாற்றுவோம்; தமிழகத்தை மாற்றுவோம்:

சென்னை மட்டுமே தலைநகரா இருப்பதால் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது. இவை அனைத்தையும் தேடி மக்கள் சிற்றூர்களில் இருந்து நகரத்தை நோக்கி வருவதால் சென்னை பிதுங்கி வழிகிறது. உயிரைச் சுமந்து செல்கிற அவசர ஊர்தி கூடச் சரியான நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. இதே நிலை நீடித்தால் சென்னையின் நிலை மேலும் சிக்கலாம். அதனால், நிர்வாக வசதிக்காக கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி உட்பட அனைத்தும் பரவலாகச் சென்றடைய நாம் தமிழர் அரசு தலைநகரை பரவலாக்கும்.

தமிழ்நாட்டுக்கு 5 தலைநகரங்கள்:

தமிழகத்தின் மையத்தில் உள்ள திருச்சி முதன்மை நிர்வாக மையமாகச் செயல்படும். சென்னை தொழில்நுட்ப தலைநகராகச் செயல்படும். கோவை தொழில் மற்றும் வணிகத் தலைநகராகவும், மதுரை மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகராகவும், கன்னியாகுமரி தமிழர் மெய்யியல் தலைநகராகவும் செயல்படும்.

பெண்களுக்குத் தனித்தொகுதி:

உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்ற நாடாளுமன்ற தொகுதிகளில் அப்படி வழங்கப்படவில்லை. பெண்களுக்கு சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் தனித்தொகுதிகள் போராடி பெறப்படும்.

மாநிலத்தில் தன்னாட்சி, ஒன்றியத்தில் கூட்டாட்சி:

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவம் என்பது பெயரளவே உள்ளது. இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 7வது பட்டியலில் உள்ள சட்டமியற்றுகின்ற முறையில் ஒன்றிய அரசு 97 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும் மாநில அரசு 66 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறது.



இவை தவிர, ஒன்றிய அரசும் மாநில அசுகளும் சேர்ந்து 47 துறைகளில் சட்டம் இயற்றலாம் என்றிருக்கிறது. ஆக ஒன்றிய அரசிடம் 144 துறைகளில் சட்டம் இயற்றுகிற அதிகாரம் உள்ளது. இது ஒன்றியத்தில் ஒற்றையாட்சி முறையையும், தன்னதிகார குவிப்பையும் உறுதி செய்கிறது.

எனவே, நாம் தமிழர் ஆட்சியில் ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்ற முழக்கத்தோடு அனைத்து வகையான துறைகளுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு என்கிற வகையில் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய மாற்றம் கொண்டு வர பாடுபடுவோம்.

தமிழர்களுக்கு முன்னுரிமை:

தற்போது நடைமுறையில் உள்ள கல்வி, சமூகம், பொருளாதாரம் சார்ந்த இடப்பங்கீட்டு முறையைப் அம்பேத்கர் வழியில் நாம் தமிழர் அரசு சீராய்வு செய்யும். நாம் தமிழர் அரசானது தமிழ்நாட்டில் தமிழ்க் குடிகளுக்கு இடப்பங்கீட்டில் முன்னுரிமை வழங்கும். பிற மொழிவழி மாநிலங்களில் தமிழின மக்களுக்கு என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறதோ அதே முன்னுரிமை பிறமொழி வழி தேசிய இன மக்களுக்கு தமிழ்நாட்டில் வழங்கப்படும்.

தமிழகத்தில் உச்ச நீதிமன்றக் கிளை:

தமிழகத்தில் உச்ச நீதிமன்றக் கிளையைச் சென்னையில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை:

தன்னலம் சார்ந்த கொடுமையான ஆட்சி முறையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது ஆட்சிமுறை தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறையாக இருக்கும்.

மணல் கொள்ளைத் தடுப்பு:

அங்குலம் ஆற்றுமணல் உருவாக நூறு ஆண்டுகள் ஆகும். ஆனால், ஒரு நாளைக்கே முப்படி ஆழத்துக்கு மேலாக ஆற்று மணலை சுரண்டி மணல் கொள்ளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மணற்கொள்ளையால் ஆற்றுப்படுகையில் உள்ள தென்னை, பனை மரங்கள் கூட பட்டுப்போய் நிற்கின்றன. எனவே, நாம் தமிழர் அரசு மணற்கொள்ளையைத் தனிப்படைகளை அமைத்து முழுமையாக தடுக்கும்.

பனை தமிழ் தேசிய மரமாக அறிவிக்கப்படும். இருக்கும் பனை மரங்களைப் பாதுகாப்பது, புதிய பனை மரங்களை வளர்த்தெடுப்பது என்ற திட்டம் உருவாக்கப்படும். ஊர்தோறும் இரக்கும் நீர் நிலைகளைச் சுற்றி பனைமரங்களை நட்டு வளர்க்க நடவடிக்கை எடுப்போம்.

வேளாண் பெருங்குடி மக்களே விலையை உறுதிப்படுத்தலாம்:

குண்டூசி முதல் ஏவுகணை வரை எல்லாவற்றையும் உருவாக்குபவர்களே விலையை முடிவு செய்ய இயலுகிறது. ஆனால், வேளாண் பெருங்குடி மக்கள் மட்டும் விளைவிக்கின்ற பொருட்களுக்கு விலையை முடிவு செய்ய இயலவில்லை. அந்த நிலையை மாற்றி உழவர்களே உணவுப் பொருட்களுக்கான விலையைத் தீர்மானிக்கிற உரிமையை நாம் தமிழர் அரசு அளிக்கும்.

ஆடு, மாடு வளர்த்தல் அரசுப் பணி:

ஆடு மாடுகளை வளர்த்தல் அவமானமில்லை, வருமானம், வெகுமானம் அரசுப் பணி. ஆடு, மாடு வளர்த்தல், அது சார்ந்த பண்ணை வேலைகள், இயற்கை உரங்கள் உருவாக்கும் நடுவம் அனைத்திலும் வேலை பார்ப்பவர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்படுவார்கள். அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கு வழங்கப்படும் என்று நாதக வாக்குறுதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மணப்பாறை.

# மணப்பாறையில் புனித ரமலான் மத நல்லிணக்க இப்தார் (நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



திருச்சி. மார்ச். 20–

திருச்சி மாவட்டம் மணப்பாறை வாகை குளம் சாலையில் அமைந்துள்ள ஜும்மா மாஸ்க் (முகமதியா பள்ளிவாசலில் புனித ரமலான் நோன்பை முன்னிட்டு மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு மணப்பாறை ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிர்வாக தலைவர் ஹாஜி ஜே முஹம்மது அனிபா தலைமையில் ஜும்மா மாஸ்க் முகமதியா பள்ளி தலைவர் ஆர். முஹம்மது சித்தீக், ஜீம்மா பெரிய பள்ளிவாசல் பொருளாளர் ஜாகிர் உசேன், மற்றும் ஜமாத்தார்கள் முன்னிலையில் இப்தார் எனும் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக மணப்பாறை அருள்மிகு ஸ்ரீ வேப்பிலை மாரியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர் ஆர் வி எஸ் வீரமணி, மணப்பாறை புனித லூர்து அன்னை ஆலய பங்குத்தந்தை தாமஸ் ஞானதுரை. குமரன் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் விஜயகுமார் மற்றும் மாற்று மத சகோதரர்கள் ஜமாத்தார்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு இத்தார் நோன்பு திறக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர் வந்திருந்த சிறப்பு விருந்தினர்களுக்கு அறு சுவை கஞ்சி மற்றும் பழங்கள், நிர்வாகத்தினர் சார்பில் வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை இஸ்லாமிய இளைஞர் உரிமை மீட்பு குழு சார்பில் நியு பேன்சி சாகுல் அமீது, அப்துல் முணாப், எம்.எஸ்.எம். அக்பர் பாட்ஷா சேட் இப்ராஹிம், அப்துல், அப்துல் சமது, முகமது ஈசாக், சையது, பாரத் மொபைல் ராஜா முகமது எஸ்.எஸ். கார்ஸ் அன்வர் தீன், மீன் கடை காசிம், எலக்ட்ரீசன் சாப்ஜான், ராயல் நவாஸ், அக்ரம் டிராவல்ஸ் இப்ராஹிம், நிஜாம், சதாம், அசாருதீன் பியாரே ஜான், பேங்க். ரியாஸ், ரியல் சாகுல், உள்ளிட்ட இஸ்லாமிய இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் சிறப்பான ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் உலக நீர் தின கருத்தரங்கம்..!



வந்தவாசி, மார்ச் 20:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் உலக நீர் தின சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் தலைமை தாங்கினார். ஜவகர் சிறுவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் கலைச்சுடர்மணி பெ.பார்த்திபன் வரவேற்றார். சுவாமி விவேகானந்தா தொண்டு மைய நிறுவனர் டாக்டர் ம.சுரேஷ்பாபு, பட்டதாரி ஆசிரியர் ம.ரகுபாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் அ.லோகநாதன் பங்கேற்று, 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். மேலும் உலகின் அனைத்து தேவைகளுக்கும் நீர் அவசியம் என்பதைப் பற்றியும், நீர் இல்லாமல் இவ்வுலகம் இயங்காது என்பதை பற்றியும் வலியுறுத்தினார். மேலும் உலக நீர் தின ஓவியப் போட்டியில் பங்கேற்று சிறப்பிடம் பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட கல்வி அலுவலக மேலாளர் ஜெயக்கண்ணு வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் கல்வி மைய ஆசிரியர் மகாவீர் நன்றி கூறினார்.

# பங்குனி அமாவாசை பூஜை



வேலூர் மாவட்டம கருகம்பத்தூர் கிராமத்தில் அமாவாசை பூஜை முன்னிட்டு ஸ்ரீ அங்காளம்மன் அம்மனுக்கு அபிஷேகம் சிறப்பு அலங்காரமாக வெள்ளி கவசம் அணிவிக்கப்பட்டது பிரீதி மாதமும் அமாவாசை பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

## இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது ரயில் முன் பாய்ந்த சிவா திலீபன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை: மார்ச்.20–

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது ரயில் முன் பாய்ந்த சிவா திலீபன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் எக்ஸ் தளத்தில் தெரிவித்திருப்பதாவது

இனி ஒரு உயிரும் போக வேண்டாம்!

இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தின்போது உணர்ச்சிவயப்பட்டு இரயில் முன் பாய்ந்த சகோதரர் சிவா திலீபன் அவர்கள் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தது மனதைக் கனக்கச் செய்கிறது.

மொழிப்போரில் நாம் ஈந்த உயிர்ப்பலிகள் போதும்! இனி ஒரு உயிரும் போகக் கூடாது! தொழில்நுட்பத்தின் உதவியால் பல புதுமையான, அமைதியான, பெரும் வீச்சு கொண்ட போராட்ட வழிமுறைகளைப் பெற்றிருக்கிறோம்!

இந்தித் திணிப்பை நம் மதிநுட்பத்தாலும் மனவுறுதியாலும் தமிழ்ப்பற்றாலும்தான் வீழ்த்த வேண்டும்! இப்போரில் நம் உயிர் வீழக்கூடாது. நம்மைப் போன்ற தமிழ் மறவர்கள் வீழ்ந்துபோனால் தாய்த்தமிழ் எங்ஙனம் வாழும் எனச் சிந்தியுங்கள். நம் உணர்ச்சிகளைக் காட்ட வேறு வழிகள் உள்ளன, உயிர்த்தியாகம் வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சகோதரர் சிவா திலீபன் அவர்களை இழந்து வாடும் தோழர் திருமுருகன் காந்தி உள்ளிட்ட மே 17 இயக்கத்தினருக்கும் தமிழுணர்வு கொண்ட அவரது இரண்டு மகள்கள் மற்றும் துணைவியார் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் உரித்தாக்குகிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# அதிகரிக்கும் வெப்பத்தால் பகலில் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம்: சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சென்னை: மார்ச். 20–

தமிழகத்தில் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் பகல் நேரங்களில் மக்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. இது தொடர்பாக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது

பகல் நேரங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம். முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வீட்டை விட்டு வெளியே வருவதை தவிர்த்துக் கொள்ளவும். கட்டட வேலை செய்வோர், புலம்பெயர் தொழிலாளர்கள் வெயிலில் பணியாற்ற வேண்டாம். நீர்ச்சத்து குறைபாட்டால் வாந்தி, மயக்கம், உடல் சோர்வு ஆகியவற்றால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கட்டாய தேவைக்காக வெளியே செல்ல நேர்ந்தால், குடை எடுத்து செல்லவும்.

வெளியே செல்ல நேரிட்டால், தளர்வான, வெளிர் நிற பருத்தி ஆடைகளை அணியவும். குடை, தொப்பி மற்றும் சன்கிளாஸ் பயன்படுத்தவும். மது அருந்துதல், காபி, தேநீர் மற்றும் செயற்கை குளிர்பானங்களை உட்கொள்வதைத் தவிர்க்கவும். வெயில் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க இளநீர், பழச்சாறு, நுங்கு அருந்தவும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் முருகன் கோயில் மார்ச் மாத உண்டியல் வருவாய் ரூ. 4.36 கோடி

திருச்செந்தூர்: திருச்செந்தூர் முருகன் கோயில் மார்ச் மாத உண்டியல் வருவாய் ரூ. 4.36 கோடி மற்றும் 1கிலோ தங்கம் கிடைத்துள்ளது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மார்ச் மாத உண்டியல் எண்ணிக்கை கோயில் நிர்வாக அலுவலக அரங்கில் நடந்தது. திருக்கோயில் தக்கார் அருள்முருகன் தலைமை வகித்து, உண்டியல் எண்ணும் பணியினை பார்வையிட்டார்.

இணை ஆணையர் ராமு முன்னிலை வகித்தார். இந்து சமய அறநிலையத்துறை முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், உதவி ஆணையர்கள் ராமசுப்பிரமணியன், மெய்வேல், அலுவலக கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, பொதுமக்கள் பிரதிநிதிகள் வேலாண்டி, மோகன், கருப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். உண்டியல் எண்ணும் பணியில் அயற்பணி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

இதன்படி உண்டியல் எண்ணிக்கையில் 4 கோடியே 36 லட்சத்து 87 ஆயிரத்து 797 ரூபாயும், தங்கம் 1,143 கிராம், வெள்ளி 20,474 கிராம், பித்தளை 91,180 கிராம் மற்றும் வெளிநாட்டு கரன்சிகள் 2,071 பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியிருந்தது தெரிய வந்தது.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் செஞ்சியில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்தார்நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பங்கேற்பு....



விழுப்புரம். மார்ச்.20–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃத்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத்அப்துல் மஜித் பாபு தலைமை தாங்கினார்.பாலகணேஷ் ஐயர், திருமுருகன் அடிகளார், கன்மலை கிருத்துவ ஆலயத்தின் அருள்தந்தைஜான் சக்தி கிருபை நாதன்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ,தலைமை செயற்குழு உறுப்பினர் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு புனித ரமலான் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, மொடையூர் துரை, பச்சையப்பன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்தீபன், செல்வி ராமசரவணன், அன்புசெழியன், ,பேரூர் செயலாளர் கார்த்திக், விழுப்புரம் வடக்கு மாவட்டகாங்கிரஸ் கட்சியின் தலைவர் ரங்க பூபதி, கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி மாதவன், தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, விசிக ராஜாராமன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், வர்தகர் சங்கத் தலைவர் செல்வராஜ், ,பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ,திமுக நிர்வாகிகள், அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறினார்

# விழுப்புரம் இ எஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இ எஸ் செயற்கை நுண்ணறிவு மற்றும் புதுமை மையம் துவக்க விழா




விழுப்புரம் மார்ச் 20

விழுப்புரம் இ.எஸ். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இ.எஸ் செயற்கை நுண்ணறிவு மற்றும் புதுமை மையம் திறப்பு விழா நடைபெற்றது .

இம்மையம் கல்லூரியின் கூட்டியக்க நிறுவனமான இ எஸ் எஸ் எம் நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டது இம்மையத்தின் முதன்மை நோக்கம் மாணவர்களுக்கு செயற்க்கை நுண்ணறிவு துறையில் திறன் பயிற்சி அளிப்பதுடன் புதுமை திறன் மேம்பாடு மற்றும் நிஜ வாழ்க்கை தேவைகளுக்கான செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகளை உருவாக்கும் செயல்முறை தளமாக விளங்குகிறது.

மையத்தினை இ எஸ் கல்வி குழுமத்தின் தலைவர் பொறியாளர் செல்வமணி தலைமை தாங்கினார்

சிறப்பு அழைப்பாளராக அமெரிக்காவில் உள்ள எஸ் கே சி ஐ டி சொல்யூஷன் நிறுவனத்தின் இயக்குனர் வெங்க நாக முரளி கோனடம் கலந்து கொண்டு மையத்தினை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்

பொறியியல் கல்லூரி முதல்வர் இந்திரா இம்மையத்தின் நோக்கம் மற்றும் பணி குறிக்கோளை விலக்கி உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஆமோஸ் ராபர்ட் ஜெயச்சந்திரன் மற்றும் இ எஸ் கல்வியல் கல்லூரி முதல்வர் முனைவர் செந்தில் முருகன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்

நிகழ்ச்சியில் இ எஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

# விளாத்திகுளம் வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி கொலை வழக்கில் இளைஞர் கைது: போலீசார் விசாரணை

தூத்துக்குடி: மார்ச். 20–

விளாத்திகுளம் வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி கொலை வழக்கில் ஒருவரை கைது செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தை சேர்ந்த 17 வயதுடைய பிளஸ்2 மாணவி, கடந்த 10ந்தேதி இரவில் இயற்கை உபாதை கழிப்பதற்காக அருகிலுள்ள காட்டுப்பகுதிக்கு சென்றார். பின்னர் அவர் திரும்பி வரவில்லை. மறுநாள் காலையில் அந்த மாணவி கொடூரமாக கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

இதுபற்றி அறிந்த குளத்தூர் போலீசார், மாணவியின் உடலை மீட்டு தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு மாணவியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட மர்மநபர்களை உடனடியாக கைது செய்யக் கோரி மாணவியின் உறவினர்கள், கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குற்றவாளிகளை கைது செய்யும் வரை மாணவியின் உடலை வாங்க மாட்டோம் என்று உறவினர்கள் தெரிவித்தனர். இதற்கிடையே மாணவி கொலை வழக்கை தீவிரமாக விசாரிக்க மாவட்ட காவல் ஆய்வாளர் தலைமையில் 10 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் சம்பவம் நடந்த இடம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வழக்கில் மாணவியின் உடன்படித்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் உள்ளிட்ட சந்தேகப்படும் வகையிலான 20க்கும் மேற்பட்ட நபர்களை போலீசார் பிடித்து விசாரணை நடத்தினர். அவர்களிடமிருந்து பல்வேறு கோணங்களில் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் விளாத்திகுளம் வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி கொலை வழக்கில் சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பவரை போலீசார் கைது செய்தனர். செல்போன் சிக்னலை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் சாயல்குடியை சேர்ந்த முனீஸ்வரனை கைது செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சுயேட்சை எம்எல்ஏ அங்காளன், முன்னாள் உள்துறை அமைச்சர் ப. கண்ணன் மகன் விக்னேஷ் திமுகவில் இணைந்தனர்



புதுச்சேரி, மார்ச்.20–

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், புதுச்சேரி மாநில சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் அங்காளன், முன்னாள் உள்துறை அமைச்சர் மறைந்த ப. கண்ணன் அவர்களின் மகன் விக்னேஷ் ஆகியோர் திமுகவில் இணைந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், புதுச்சேரி, திருபுவனைத் சட்டமன்றத் தொகுதி தற்போதைய சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் அங்காளன் மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் மக்கள் தலைவர் என்றழைக்கப்பட்ட மறைந்த முன்னாள் சபாநாயகர், உள்துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ப. கண்ணன் அவர்களின் மகன் ராஜ்பவன் தொகுதியைச் சேர்ந்த விக்னேஷ் கண்ணன் ஆகியோர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று காலை திமுகவில் இணைந்தனர்.

அப்போது, திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, புதுச்சேரி மாநில திமுக ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ., ஆகியோர் உடனிருந்தனர்.

## புதுச்சேரி 2026 சட்டமன்ற தேர்தல்: ‘செங்கோல் நீதிப் பாட்டாளி மக்கள் வாழ்வாதார கூட்டணி’ உதயம்!



புதுச்சேரி | மார்ச் 20

புதுச்சேரி மாநில அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக, சமூக நீதியையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் முன்னிறுத்தி புதிய கூட்டணியொன்று உதயமாகியுள்ளது.

முக்கிய சந்திப்பு: , SNMMK நிறுவனத் தலைவர் G. சத்திய மூர்த்தி, IFS (Ex) அவர்கள், சமூக நீதி அரசியலின் முன்னோடியும், பாட்டாளி மக்கள் கட்சி (PMK) நிறுவனர் தலைவருமான டாக்டர் அய்யா அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் முடிவில், வரவிருக்கும் 2026 புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள “செங்கோல் நீதிப் பாட்டாளி மக்கள் வாழ்வாதார கூட்டணி” உருவாக்கப் பட்டுள்ளது.

கூட்டணியின் ஒருமித்த முடிவு: டாக்டர் அய்யா அவர்களின் தலைமையில் அமையவுள்ள இந்த வலுவான சமூக நீதி கூட்டணி, புதுச்சேரியின் அனைத்துத் தொகுதிகளிலும் களம் காணும் என்று இந்த சந்திப்பில் அதிகாரப்பூர்வமாக முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டணியின் ஐந்து முக்கிய இலக்குகள்: சமூக நீதி: அடித்தட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, சமூக நீதியை உறுதி செய்தல்.

சமத்துவ அரசியல்: பாகுபாடற்ற, அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவ அரசியல் அமைப்பை உருவாக்குதல்.

இளைஞர் – மகளிர் நலன்: புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் அதிகாரமளித்தல் மூலம் இளைஞர்கள் மற்றும் பெண்களின் எதிர் காலத்தை மேம்படுத்துதல்.

உரிமை மீட்பு: காலம் காலமாக புறக்கணிக் கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்தல்.

பொருளாதார புரட்சி: சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப் படுத்தும் வகையிலான ஆக்கப்பூர்வமான பொருளாதார மாற்றங் களைக் கொண்டு வருதல்.

“இது வெறும் அரசியல் கூட்டணி மட்டுமல்ல; சமூக நீதியும் மக்களின் வாழ்வாதாரமும் கைகோர்க்கும் ஒரு புதிய புரட்சி. புதுச்சேரி அரசி யலில் இது ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமையும்.”

இந்த புதிய கூட்டணியின் அறிவிப்பு புதுச்சேரி அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சமூக மாற்றத்தை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பாக இக்கூட்டணி உருவெடுத்துள்ளது.

## ஆசிரியர் பயிற்சி தேர்வு; தனித்தேர்வர்கள் 26ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம்: தேர்வுத்துறை அறிவிப்பு

சென்னை: மார்ச்.20–

ஆசிரியர் பயிற்சி படித்துதோல்வியடைந்த மாணவ, மாணவியருக்காக மே மாதம் நடத்தப்பட உள்ள தேர்வில் பங்கேற்க விரும்பும் தனித்தேர்வர்கள், 26ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம், என்று தேர்வுத்துறை அறிவித்துள்ளது. தமிழகத்தில் ஆசிரியர் பயிற்று நிறுவனம் மற்றும் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் படித்து தேர்வு எழுதி தோல்வியடைந்த மாணவ, மாணவியர்கள் தற்போது மீண்டும் தேர்வு எழுத தேர்வுத்துறை ஏற்பாடு செய்துள்ளது. அதன்படி மே மற்றும் ஜூன் மாதங்களில் தேர்வு நடத்தப்பட உள்ளது. இந்த தேர்வுகளில் பங்கேற்க விரும்பும் தோல்வியடைந்த மாணவ, மாணவியர் தனித்தேர்வர்களாக விண்ணப்பிக்கலாம். www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப் பங்களை பதிவிறக்கம் செய்து, அந்த விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, ஏற்கெனவே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றுகளின் அனைத்து நகல்களையும் கண்டிப்பாக இணைத்து, அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் விண்ணப் பிக்கலாம். தேர்வு எழுத உள்ள ஒவ்வொரு பாடத்துக்கும் ரூ.50, மதிப்பெண் சான்று (முதலாம் ஆண்டு) ரூ.100, மதிப்பெண் சான்று (இரண்டாம் ஆண்டு ரூ.100, பதிவு மற்றும் சேவைக் கட்டணம் ரூ.15, ஆன்லைன் பதிவுக் கட்டணம் ரூ.70 செலுத்த வேண்டும்).

மேற்கண்ட தேர்வு கட்டணம் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வரும் 26ம் தேதி முதல் ஏப்ரல் 3ம் தேதி வரை சமர்ப்பிக்க வேண்டும். இந்த நாட்களில் விண்ணப்பிக்க தவறும் மாணவ, மாணவியர் சிறப்பு அனுமதி திட்டத்தில் ஏப்ரல் 6ம் தேதி மற்றும் 7ம் தேதிகளில் விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு அனுமதி திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கும் நபர்கள் ரூ.1000 கட்டணம் செலுத்த வேண்டும், என்று தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

## விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் பங்குனி மாதம் அமாவாசை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் கொட்டும் மழையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்



விழுப்புரம். மார்ச். 20–

விழுப்புரம் மாவட்டம் உலக பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் பங்குனி மாதம் அமாவாசையை முன்னிட்டு ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

பங்குனி மாதம் அமாவாசை முன்னிட்டு அதிகாலை முதலே நடை திறக்கப்பட்டு மூலவர் மற்றும் உற்சவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் பன்னீர் சந்தனம் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

அதன் பின் வண்ண மலர்கள், தங்க கவச அலங்காரம் செய்து சர்க்கரை பொங்கல், சுண்டல் பல்வேறு வகையான பழங்களை கொண்டு நெய்வேத்தியமும் அதனைத் தொடர்ந்து தீபாராதனையும் நடைபெற்றது.

அதன்பின் நீண்ட நெடு வரிசையில் காத்துக் கொண்டிருந்த பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப் பட்டனர். உற்சவர் அங்காளம்மன் ஸ்ரீ சேஷசயனம் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நாள் முழுவதும் திரளான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வந்திருந்த நிலையில் இரவு பதினோரு மணிக்கு மேல் பூசாரிகள் வழக்கப்படி உற்சவர் அங்காளம்மன் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சல் மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டு பூசாரிகள் வழக்கப்படி தாலாட்டு பாடி தீபாரதனை எடுத்து ஊஞ்சல் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. நாள் முழுவதும் விரதம் இருந்து ஊஞ்சல் உற்சவம் காண வேண்டி பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கையில் தீபம் ஏந்தி ஓம் சக்தி அங்காளம்மா என்ற கோஷத்துடன் அங்காளம்மனை தரிசனம் செய்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கோவில் நிர்வாகம் சார்பில் கூட்ட நெரிசலை தவிர்க்க தடுப் பணைகள் மற்றும் விழப்புரம் மாவட்ட கண் காணிப்பாளர் தலைமையில் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

கழிப்பறை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதில் கோவில் உதவி ஆணையர் சக்திவேல் மற்றும் அறங்காவலர் குழு தலைவர் சேட்டு என்கிற ஏழுமலை பூசாரி மற்றும் பிற அறங்காவலர்கள் ஊஞ்சல் உற்சவத்தில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## தமிழகத்துடன் சேர்ந்து புதுச்சேரிக்கும் தேர்தல் நடத்த வேண்டும்

### நமது மக்கள் கழக நிறுவன தலைவர் நேரு வலியுறுத்தல்



புதுச்சேரி. மார்ச்.20–

சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களும் வேட்பாளர்களும் சிந்திக்க கூட நேரமில்லாத வகையில் அறிவிக்கப்பட்ட தேர்தல் அறிவிப்பை திரும்ப பெற்று தமிழகத்துடன் சேர்ந்து புதுச்சேரிக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று நமது மக்கள் கழக நிறுவன தலைவர் நேரு கேட்டுக்கொண்டுள்ளார்

இது தொடர்பாக அவரது அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர்...

புதுச்சேரி உப்பனாற்று பாலம் கடந்த 18 ஆண்டுகளாக கட்டப்பட்டு வருகிறது இதனால் பொதுமக்கள் கடுமையான சிரமத்திற்கு ஆளாகியுள்ளார்கள். மேலும் ஆற்றின் ஓரம் கட்டுமான பணி என்ற பெயரில் இரு பக்கமும் சுவர்கள் கட்டப்பட்டு வருவதால் ஆற்றின் ஓரம் உள்ள வீடுகள் சேதம் அடைந்துள்ளது. மேலும் இவர்களுக்கு பாதிப்புகளை பொறுத்து நிவாரண உதவிகளும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர் தன் தொகுதியில் பல வருடமாக இந்த பணி நடைபெற்று வருவதால் தனக்கு தொகுதியில் அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் அரசின் செயல்பாடு உள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

28 கோடியில் டெண்டர் விடப்பட்டு தொடங்கப்பட்ட பாலம் கட்டுமான பணி தற்போது 100 கோடி ரூபா வரை சென்றுள்ள தாக கூறப்படுகிறது இதனால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது மேலும் இதில் மிகப்பெரிய ஊழல் முறைகேடுகளும் நடந்துள்ளதாக தெரிவித்த அவர் இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சட்டமன்றத் தேர்தல் தேதி அவசரக் கதியில் அறிவிக்கப்பட்டுள்ளது வாக்காளர்களுக்கு வாக்களிக்கவும் வேட்பாளர்களுக்கு போட்டியிடுவது குறித்து சிந்திக்கவும் கொஞ்சம் கூட நேரம் தராமல் அவசரக்கதியில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது எனவே இதனை ரத்து செய்துவிட்டு தமிழகத்துடன் சேர்ந்து புதுச்சேரிக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று நேரு எம்எல்ஏ கோரிக்கை விடுத்தார்.

தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ந்து ஒரு சில தொகுதிகளில் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் களம் காண உள்ளதாக தெரிவித்த நேரு தொடர்ந்து மக்கள் பணி மீதும் மாநில வளர்ச்சி மீதும் அக்கறை செலுத்தி தேர்தல் பணிகளை அதற்கு தகுந்தார் போல் முன்னெடுப்போம் என்றும் உறுதி அளித்தார்.

## அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் வணிகர்கள் ரூ.2 லட்சம் வரை எடுத்து செல்ல அனுமதிக்கணும்: விக்கிரமராஜா பேட்டி

தஞ்சாவூர்: மார்ச்.20–

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூர் கீழவாசலில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரமராஜா நிருபர்களுக்கு அளித்த பேட்டி: திருவாரூரில் மே 5ம்தேதி வணிகர்தின 43வது மாநாடு நடக்கிறது. அதில் மாநிலம் முழுவதும் இருந்து 5 லட்சம் வணிகர்கள் கலந்து கொள்வார்கள். ஆன்லைன் வர்த்தகம் மற்றும் கார்ப்பரேட் கம்பெனிகளின் வருகை போன்றவற்றிற்கு மத்திய, மாநில அரசுகள் தீர்வு காண வேண்டும் போன்ற பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட உள்ளோம்.மாநில செய்திகள்

தேர்தல் நடத்தை விதிமுறை காலத்தில் ரூ.50,000த்துக்கு மேல் கொண்டு சென்றால் பறிமுதல் செய்து வருகின்றனர். மருத்துவ செலவுகளுக்கு பணம் எடுத்து சென்ற பெண் ஒருவர் கதறி அழுததை பார்த்தோம். வணிகர்கள் பணம் எடுத்து செல்ல ரூ.50 ஆயிரம் என்பதை ரூ.2 லட்சம் வரை கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு தேர்தல் அறிவிப்புக்கு முன்பே கோரிக்கை வைத்தோம். அந்த கோரிக்கையை மீண்டும் தேர்தல் ஆணையத்திற்கு வலியுறுத்தி உள்ளோம்.

தமிழ்நாட்டில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அரசியல் கட்சிகள் இலவசம் வழங்க கூடாது என்பது எங்கள் கருத்து. ஏழை, எளிய மக்கள் இதை புரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் அதிகாரிகள் வணிகர்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 250 கம்பெனி துணை ராணுவப் படையினர் தமிழ்நாடு வருகை!!

சென்னை: மார்ச்.20–

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 250 கம்பெனி துணை ராணுவப் படையினர் தமிழ்நாடு வருகின்றனர். ஏற்கனவே 50 கம்பெனி துணை ராணுவப் படையினர் வந்துள்ள நிலையில், கூடுதலாக 250 கம்பெனி ராணுவப் படை வருகிறது. தமிழக சட்டமன்றத் தேர்தலில் சுமார் 20,000 துணை ராணுவப் படையினர் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். ஒரு தொகுதிக்கு ஒரு கம்பெனி துணை ராணுவப் படை என பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்

## வெறுப்பு பேச்சுகள் குற்றங்களுக்கு எதிராக தமிழ்நாட்டில் சட்டம் இயற்றப்பட வேண்டும்

### காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற கோரிக்கை கடிதம் அளிப்பு .



கோவை மார்ச்:20

கர்நாடக காங்கிரஸ் அரசு அண்மையில் (டிசம்பர் 2025) Hate Speech மற்றும் Hate Crimes ஐ தடுக்கும் சட்டத்தை (Karnataka Hate Speech and Hate Crimes (Prevention) Bill, 2025) நிறைவேற்றியது. இதுபோன்ற ஒரு வலுவான சட்டத்தை தமிழ்நாட்டிலும் கொண்டு வர வேண்டும் என்று கோரி காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் (Manifesto) இதை உறுதியாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை கடிதத்தை காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை ( Election Manifesto) குழுவில் நிரந்தர அழைப் பாளராக (Permanent Invitee) இடம்பெற்றுள்ள அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளரும் (National Secretary) மயூரா எஸ் ஜெயக்குமார் அவர்களை நேரில் சந்தித்து காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி அஸ்மத்துல்லா தலைமையில் சமர்ப்பித் துள்ளார்கள்.

அவருடன் அப்துல் பர்வேஸ், பேரிங் பாபு, மெட்டல் சலீம், ஹாஜா , முஹம்மது சாதிக் , பி கே நசீர், பீட்டர் , ரிஸ்வான் ஷெரிப் , சேதுபதி , மெல்வின் , சல்மான், பாலா மற்றும் சிலர் கலந்து கொண்டனர்..

## விரட்டி, விரட்டி பணம் பறிமுதல்; தேர்தல் ஆணையம் கெடுபிடி:
# பணத்தை இழந்தவர்கள் பரிதவிப்பு

கோவை: மார்ச்.20–

சோதனை என்ற பெயரில் விரட்டி விரட்டி பணம் பறிமுதல் செய்யும் தேர்தல் ஆணையத்தின் கெடுபிடியால் தொழில் செய்பவர்கள், வியாபாரிகள் பணத்தை கொடுத்து விட்டு பரிதவித்து வருகின்றனர். தேர்தல் நடத்தை விதிகள் செயல்பாட்டுக்கு வந்துவிட்ட நிலையில் 50 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக மட்டுமே பணம் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும். அதற்கு மேல் பணம் வைத்திருந்தால் ஆதாரம் காட்ட வேண்டும். தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த பின்னர் 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள பொருட்களையும் பரிசு என கருதி தேர்தல் பிரிவினர் பறிமுதல் செய்து வருகின்றனர்.

தேர்தல் பிரிவினர், தொழில் வர்த்தகம் தொடர்பான பணம், பொருட்கள் பரிவர்த்தனை தொடர்பான ஆதாரங்களை காட்டிலும் எங்கே எப்போது பணம் பெறப்பட்டு, எப்போது பொருள் வாங்கப்பட்டது என கேட்டு பறிமுதல் செய்து வருகின்றனர். இதனால் குழப்பமான நிலைமை இருக்கிறது.

கோவை மாவட்டத்தில் மட்டும் கடந்த 2 நாளில், 30 லட்ச ரூபாய்க்கு அதிகமான தொகை, குண்டா, பாத்திரம் உள்ளிட்ட பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சாக்லெட் வியாபாரியிடம் 6.50 லட்ச ரூபாய், பிஸ்கட் வியாபாரியிடம் 85 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

பணம் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர், பறிமுதல் செய்த அலுவலர்களிடம் தொகைக்கான ஆதாரங்களை காட்டி அதை திரும்ப பெற நேற்று சிலர் கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் கணக்கு பிரிவில் குவிந்தனர். இது தொடர்பாக புகார்தாரர்கள் கூறுகையில், ''பொருட்களை கொடுத்து பணம் வாங்கி வருகிறோம். பொருட்கள் விற்பனைக்கு ஜிஎஸ்டி இருக்கிறது. அதை காட்டுகிறோம். வணிக, வர்த்தக விவரங்களை காட்டுகிறோம். ஒரு இடத்திற்கு கலெக்ஷன் பணிக்கு போய் தொகை வாங்கி வருகிறோம்.

அந்த பணத்தை பறிமுதல் செய்து விடுகிறார்கள். நாங்கள் விற்ற பொருட்கள், அதற்கு வாங்கிய தொகை என ஆதாரம் காட்டினாலும் இது அந்த தொகை தானா என தேர்தல் பிரிவினர் சந்தேகம் தெரிவிக்கிறார்கள். மேலும் பணத்தை பறிமுதல் செய்தால் தேர்தல் பிரிவில் பாராட்டு கிடைக்கும் என்பது போல் கருதி பணி செய்கிறார்கள். இதனால் எங்களுக்கு தான் அலைச்சல். நாங்கள் பணத்திற்கான ஆதாரங்களை கணக்கு பிரிவில் காட்டி, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்திற்கு சென்று அங்கே விண்ணப்பித்து ஆதாரங்களை காட்டி, கடைசியாக கருவூலம் சென்று அங்கே ஆதாரம் காட்டி பெற வேண்டியிருக்கிறது.

பல நாட்கள் நடையாய் நடந்தால் தான் தொகையை மீட்க முடியும். இல்லாவிட்டால் அரசு கணக்கில் சேர்த்து விடுவோம் என்கிறார்கள். ஆதாரங்களை அலுவலர்கள் சிலர் முறையாக ஏற்பதில்லை. ஆதாரம் இருந்தாலும் சந்தேகம் என பறிமுதல் செய்கிறார்கள்'' என்றனர். இதுகுறித்து தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரமராஜா கூறுகையில், "வியாபாரிகளை விரட்டி விரட்டி பணத்தை தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்து வருகின்றனர். நாங்கள் அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் அல்ல. ஓட்டுக்கு பணம் கொடுப்பவர்கள் அல்ல. வியாபாரத்துக்கு பணம் எடுத்து செல்லக்கூடியவர்களை மடக்கி பிடித்து வீடியோ எடுத்து துன்புறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தேர்தல் அதிகாரியிடம் மனு கொடுத்துள்ளோம்'' என்றார். நாங்கள் விற்ற பொருட்கள், அதற்கு வாங்கிய தொகை என ஆதாரம் காட்டினாலும் இது அந்த தொகை தானா என தேர்தல் பிரிவினர் சந்தேகம் தெரிவிக்கிறார்கள். பல நாட்கள் நடையாய் நடந்தால் தான் தொகையை மீட்க முடியும். இல்லாவிட்டால் அரசு கணக்கில் சேர்த்து விடுவோம் என்கிறார்கள்.

# ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் பணி சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது..

## ஈரோட்டில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஆட்சியர் ச. கந்தசாமி தகவல்..



ஈரோடு. மார்ச். 20

ஈரோடு மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளிலும் சட்டமன்ற தேர்தலுக்கான பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்று வருவதாக, ஈரோட்டில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஆட்சியர் ச. கந்தசாமி தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகின்ற 23/4/ 2026 அன்று நடைபெற உள்ளது. இதற்காக தமிழ்நாடு முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தலுக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட அன்று முதல் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டு, தேர்தல் ஆணையத்தின் முழு கட்டுப்பாட்டில் அரசு நிர்வாகம் இயங்கி வருகிறது..

தேர்தல் பார்வையாளர்கள், தேர்தல் நிலை குழு,, தேர்தல் கண்காணிப்பு குழு, தேர்தல் பறக்கும் படை என பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் தொகுதி முழுவதும் கண்காணிப்பு பணியில் தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள, ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, பவானி, கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானிசாகர் உள்ளிட்ட 8 சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தலுக்கான பணிகள் முடக்கி விடப்பட்டு அவைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலுக்காக ஈரோடு மாவட்ட நிர்வாகம் சார்பில் தேர்தல் பணி நிலை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சியரும், மாவட்டத் தேர்தல் அலுவலருமான ச. கந்தசாமி மாவட்டத்தில் நடைபெற்று வரும் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு கூட்டம் நடத்தி விளக்கம் அளித்தார்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பு கூட்டம் நேற்று காலை ஈரோடு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போது ஈரோடு மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ச. கந்தசாமி தெரிவித்ததாவது.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொது தேர்தலுக்கான பணிகள் ஈரோடு மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது. தேர்தல் பணிக்காக தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு அந்த குழுவில் உள்ள அதிகாரிகள் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். எந்த ஒரு தகவலாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளிடமும், செய்தியாளர்களுக்கென்று தகவல்கள் தெரிவிக்க நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் இடத்திலும் செய்தியாளர்கள் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

செய்தியாளர்களுக்கு உரிய வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை உரிய அடையாள அட்டையை வழங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் இந்த தேர்தலுக்காக ஒவ்வொரு சட்டமன்ற வாரியாக, தேர்தல் பொது பார்வையாளர்கள், தேர்தல் செலவின பார்வையாளர்கள், மட்டும் தேர்தல் காவல் பார்வையாளர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை வர உள்ளனர்.

எதிர்வரும் 23 4 2026 அன்று நடைபெறும் சட்டமன்ற பொது தேர்தல் சுமுகமான முறையில் மற்றும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உட்பட்ட ஈரோடு மாவட்டத்திற்கு உட்பட்ட எட்டு சட்டமன்ற தொகுதிகளிலும் சிறப்பான முறையில் தேர்தலை நடத்தி முடிக்க அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது.

வாக்களிக்க வரும் வாக்காளர்களுக்கு குடிநீர், வெயில் பந்தல் மற்றும் பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளிட்டவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்கு சாவடிக்கு வந்து வாக்களிக்கலாம். 100% வாக்குப்பதிவு என்பது உறுதிப்படுத்தப்படும் வகையில் ஏற்பாடுகள் உள்ளது.

இவ்வாறு நேற்று ஈரோடு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஆட்சியர் ச. கந்தசாமி செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டிவி கிரண் ஸ்ருதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ. சுகுமார், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,,

( செய்திப் பிரிவு ) கலைமாமணி மற்றும் செய்தியாளர்கள் புகைப்பட கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

# கோடை கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு: செல்வப்பெருந்தகை அறிக்கை!

சென்னை: மார்ச். 20

கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் அதிக வெப்பநிலை மற்றும் வறட்சி நிலவுகிறது. இந்நிலையால் தீ விபத்துகள், வெப்ப அலை பாதிப்புகள் மூலம் உயிர்கள் மற்றும் பிற சேதங்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. இதனால், பொது மக்கள், தொழிற்சாலைகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் மிகுந்த விழிப் புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம். பொது மக்கள் தங்களது வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மின்கம்பிகள், மின் சாதனங்கள் பாதுகாப்பான நிலையிலுள்ளனவா என பரிசோதனை செய்ய வேண்டும். ஓவர்லோடு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். குழந்தைகள் தீப்பெட்டி, பட்டாசு போன்ற பொருட்களுடன் விளையாடுவதை கண்காணிக்க வேண்டும்.

காடு மற்றும் வெளிப்புற பகுதிகளில் சிகரெட் துண்டுகள் போன்றவற்றை அலட்சியமாக எறிவதை தவிர்க்க வேண்டும். வீடுகளில் சிறிய தீயணைப்பு கருவி வைத்திருப்பது பாதுகாப்பான நடைமுறையாகும். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட தீயணைப்பு துறைகள் கோடை கால சிறப்பு கண் காணிப்பு நடவடிக்கை களை தீவிரப்படுத்த வேண்டும். தீயணைப்பு வாகனங்கள், நீர்த் தொட்டிகள் மற்றும் அவசர உபகரணங்கள் அனைத்தும் செயல்பாட்டில் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும். பொது மக்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி அவசர எண்கள் பற்றிய தகவலை பரப்ப வேண்டும். வெடி பொருட்கள் தயாரிக் கும் நிறுவனங்கள் வெப்பநிலை கட்டுப்பாடு, பாதுகாப்பான சேமிப்பு மற்றும் மின்கசிவு தடுப்பு நடவடிக்கைகளை உறுதியாக பின்பற்ற வேண்டும். தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அரசு விதிமுறைகள் முழுமையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் வெப்பஅலை எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டு, குடிநீர் மற்றும் மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்ய வேண்டும். காடுகளில், தீ தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். கோடை காலத்தில் அலட்சியமாக இருப்பது பேரழிவிற்கு வழிவகுக்கும். ஒவ் வொரு வரும் பொறுப்புணர்வுடன் செயல்பட்டால் தீ விபத்துகளையும் உயிரிழப்புகளையும் தவிர்க்க முடியும் என்பதை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் இவ்விழிப்புணர்வு அறிக்கையின் மூலம் வலியுறுத்துகிறேன்.

## மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் ஊஞ்சல் தாலாட்டு வைபவம்...!



வந்தவாசி, மார்ச் 20:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலில் அமாவாசை ஊஞ்சல் தாலாட்டு வைபவம் மற்றும் சிறப்பு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. மூல மூர்த்தி அம்மனுக்கு வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு அருட்சக்தி ஆறு. லட்சுமணன் ஸ்வாமிகள் மேற்பார்வையில் யாகசாலை பூஜை நடந்தேறியது . இரவு உற்சவ மூர்த்தி அம்மனுக்கு ஊஞ்சல் தாலாட்டு வைபவம் நடைபெற்று மேளதாளத்துடன் கோயில் பிரகாரத்தில் பவனி வந்தனர். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனை வருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# தமிழ்நாடு கூடுதல் தலைமை தேர்தல் ஆணையருக்கு பெட்ரோலிய டீலர்கள் கூட்டமைப்பு கோரிக்கை

சென்னை: மார்ச்.20–

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் நிலையில், பெட்ரோல் பங்க் ஊழியர்கள் எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி செலுத்த வேண்டிய பணத்தை பறிமுதல் செய்யாமல் இருக்கக் கோரி தமிழ்நாடு கூடுதல் தலைமை தேர்தல் ஆணையருக்கு பெட்ரோலிய டீலர்கள் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பெட்ரோல் பங்க்களில் 75% விற்பனை பணமாக நடைபெறுவதால் இக்கோரிக்கை வைத்துள்ளனர்.

வரும் ஏப்ரல் 23ம் தேதி தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. அதற்காக தற்போது தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் ஒருவர் பணம் கொண்டு சென்றால், அதை பறக்கும் படையினர் பறிமுதல் செய்கின்றனர்.

மாநிலம் முழுவதும் IOCL, BPCL, HPCL நிறுவனங்களின் கீழ் இயங்கும் 7,100க்கும் மேற்பட்ட பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் தமிழ்நாடு பெட்ரோலிய டீலர்கள் சங்கம்(TNPDA) சார்பாக, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு எங்களின் முழு ஒத்துழைப்பையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெட்ரோலியப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக வகைப்படுத் தப்பட்டுள்ளதால், பொது மக்களுக்கும் அவசரகால சேவைகளுக்கும் தடையற்ற விநியோகத்தைப் பராமரிப்பது இன்றியமையாதது. இது தொடர்பாக, பின்வரும் செயல்பாட்டுக் கட்டுப்பாடுகளை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

எங்களின் தினசரி பரிவர்த்தனைகளில் சுமார் 75% ரொக்கப் பரிவர்த்தனைகளே ஆகும். ஒவ்வொரு விற்பனை நிலையத்திலிருந்தும் பெறப்படும் தொகை 22 லட்சம் முதல் 30 லட்சம் வரை இருக்கும். எண்ணெய் நிறுவனங்களுக்கு சரியான நேரத்தில் ஸிஜிநிஷி பணம் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், "வறட்சி" நிலைகளைத் தடுப்பதற்கும், இந்த ரொக்கப் பணத்தை தினசரி வங்கிகளில் டெபாசிட் செய்ய வேண்டும் அல்லது இரவு நேரங்களில் பாதுகாப்பிற்காக டீலரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

பறக்கும் படைகள் (FS) அல்லது நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) மேற்கொள்ளும் ஆய்வுகளின் போது எந்தவிதமான குழப்பங்களையும் தவிர்ப்பதற்காக, பின்வரும் தரநிலை சரிபார்ப்பு ஆவணங்களை எடுத்துச் செல்லுமாறு எங்கள் உறுப்பினர்களுக்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம்.

வங்கியிடமிருந்து கடிதம் அல்லது பணப் பரிமாற்றச் சீட்டு. விற்பனையக ஒப்பந்தத்தின் 1ம் பக்கம். குறிப்பிட்ட நபர் பணத்தைக் கொண்டு செல்ல அங்கீகாரம் அளித்து, விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட கையொப்பமிடப்பட்ட கடிதம். அங்கீகரிக்கப்பட்ட நபரின் ஆதார் அட்டை நகல்

தினசரி விற்பனைப் பதிவு, தினசரி விற்பனைச் சுருக்கத்தின்" நகல். ஆகியவை கொண்டு செல்லப்படுகிறது.

பெட்ரோலியப் பொருட்கள், OTP, டிஜிட்டல் சாவிகள் மூலம் கட்டுப்படுத்தப் படும் ணிபூட்டு அமைப்புகள் பொருத்தப்பட்ட டேங்க் லாரிகளில் கொண்டு செல்லப்படுகின்றன. விநியோக இடத்திற்கும் சில்லறை விற்பனை நிலையத்திற்கும் பெட்ரோல் கிடங்கிற்கும் இடையில் கொண்டு செல்லப்படும் போது இந்தப் பூட்டுகளைத் திறக்க முடியாது.

சரக்குகளை இறக்கிய பிறகு, கொண்டு செல்லும் வழியில் எந்தவொரு முறைகேட்டையும் தடுப்பதற்காக, பெட்ரோலிய அமைச்சகத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் எண்ணெய் நிறுவனத்தின் ஆணைகளுக்கு இணங்க, சரக்குப் பெட்டிகள் மீண்டும் பூட்டப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முன்னிலையில், சில்லறை விற்பனை நிலையத்திலோ அல்லது கிடங்கிலோ பூட்டைத் திறக்கலாம்.

அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் (DEOக்கள்) மற்றும் அமலாக்கக் குழுக்களுக்குப் பின்வருமாறு ஒரு சுற்றறிக்கை, அறிவுறுத்தலை வெளியிடுமாறு தங்களின் அலுவலகத்தைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். மேற்கூறிய ஆவணங்களைச் சரிபார்த்து, முறையான வணிகப் பணத்தைப் பறிமுதல் செய்யாமல் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும்.

விலைப்பட்டியல் மற்றும் பணியாளர்களின் சான்றுகளைச் சரிபார்த்த பிறகு, மின்னணுப் பூட்டு (E-locked) இடப்பட்ட பெட்ரோலிய டேங்கர் லாரிகள் தடையின்றிச் செல்ல வழிவகை செய்ய வேண்டும். எங்கள் உறுப்பினர்கள் இந்த நெறிமுறைகளைப் பின்பற்றி, அனைத்துப் பாதுகாப்புச் சோதனைகளுக்கும் முழுமையாக ஒத்துழைப்பார்கள் என்று நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

# கொடைக்கானலில் பரவும் காட்டுத் தீ: வனத்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை



கொடைக்கானல்: மார்ச்.20

கொடைக்கானலில் பரவும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் கடந்த சில மாதங்களாக மழையின்றி வறண்ட சூழல் நிலவி வருகிறது. இதனால், வனப் பகுதியை ஒட்டியுள்ள விளைநிலங்களில் செடி, கொடி உள்ளிட்ட தாவரங்கள் அனைத்தும் காய்ந்து கிடக்கின்றன.

இந்த நிலையில் கொடைக்கானல் பேத்துப்பாறையை அடுத்த புலியூர், பாரதி அண்ணா நகர், அஞ்சு வீடு உள்ளிட்ட பகுதிகளில் வனப்பகுதியை ஒட்டி உள்ள நிலப் பகுதியில் காட்டுத்தீ பரவி எரிந்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்தாவிட்டால், ஒட்டியுள்ள வனப்பகுதியிலும் பரவும் அபாயம் உள்ளது. பல ஏக்கர் பரப்பளவில் காட்டுத் தீ பரவி கரும்புகை வெளியேறி வருகிறது. எனவே, காட்டுத் தீயை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421